NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 30 May 2017

# 'யேல்–என்யுஎஸ்'சின் 60% பட்டதாரிகளுக்கு பட்டம் பெறும் முன்பே வேலை, படிப்பு வாய்ப்பு

ஆசியாவின் முன்னணி பரந்து பட்ட கலைக்கல்விக் கல்லூரியான யேல்–என்யுஎஸ் கல்லூரியின் பட்டதாரிகள் 119 பேர் நேற்று அதிபர் டோனி டான் கெங் யாமிடமிருந்து தங்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இவர்கள் இந்தக் கல்லூரியின் முதல் அணி பட்டதாரி அணியினர்.

இவர்களில் 103 பேர் இளநிலை கலைத்துறைப் பட்டப்படிப்பை முடித்து ஹானர்ஸ் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். 16 பேர் இளநிலை அறிவியல்துறைப் படிப்பில் ஹானர்ஸ் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள்.

இந்தப் பட்டமளிப்பு நிகழ்ச்சி சிங்கப்பூரின் உயர்கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடாக இருக்கிறது என்று நிகழ்ச்சியில் பேசிய அதிபர் குறிப்பிட்டார்.

இந்தக் கல்லூரியில் நான்கு ஆண்டு காலம் பரந்த அடிப்படையில் பலதுறைக் கல்வியைக் கற்றிருக்கும் இந்தப் பட்டதாரிகள் சமூகத்துக்குச் சிறந்த தொண்டாற்றுவார்கள் என்றும் டாக்டர் டான் தெரிவித்தார்.

படித்து பட்டம் பெறுவதற்கு முன்னதாகவே இந்தப் பட்டதாரிகளில் 60 விழுக்காட்டினருக்கு வேலை கிடைத்து விட்டது. அல்லது மேற்படிப்பில் இடம் கிடைத்து விட்டது. வேலைக்குச் செல்வோருக்குப் பலதுறைகளில் இருந்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

வேலை கிடைத்தவர்களில் 24 விழுக்காட்டினர் அரசுத் துறைக்குச் செல்கிறார்கள்.

யேல்–என்யுஎஸ் கல்லூரியின் பரந்துபட்ட கலைக்கல்வி மாணவர்கள் பலதுறைப் பாடங்களைப் படிக்கிறார்கள். இது இன்றைய சூழலில் மிக முக்கிய தேவையாக இருக்கிறது. இந்தப் பட்டதாரிகளில் 95 விழுக்காட்டினருக்கு அனைத்துலக படிப்பு அனுபவம் கிடைக்க இந்தப் பட்டப்படிப்பு வகை செய்கிறது.

மாணவர்களை வேலை பார்க்க ஆயத்தமாக்குவதோடு அவர்களுக்கு நேரடி அனுபவக் கல்வி மூலம் பல வாய்ப்புகளை இந்தப் படிப்பு ஏற்படுத்தித் தருகிறது.

நேரடி பயிற்சி என்பது சவால் மிக்கதாக இருந்தாலும் உண்மையில் அது பெரும்பலன் அளிக்கிறது என்று பட்டதாரிகளில் ஒருவரான எரிக்கா டெர்ரோன்ஸ் ஷிபுயா தெரிவித்தார்.

யேல்–என்யுஎஸ் கல்லூரியின் நிறுவனத் தலைவரான பேராசிரியர் லெவிஸ், இந்த முதல் அணி மாணவர்களின் சாதனைகள் குறித்து தான் பெருமைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

இந்த மாணவர்கள் புத்தாக்கத் திறன், தகவல் தொடர்புத் தேர்ச்சிகள், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றல்கள் ஆகியவற்றுடன் கூடியவர்கள் என்றும் இத்தகைய திறமைகளுடன் இவர்கள் சவால்மிக்க இன்றைய வேலைச் சூழலைத் திறம்பட சமாளிப்பார்கள் என்றும் பேராசிரியர் லெவிஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் (உயர் கல்வி, திறன்கள்) ஓங் யி காங்கும் நேற்றைய பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.